**செ.வெ.எண்: 46** **நாள்: 20.10.2021**

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம் பட்டமங்களம், வெண்மணி ஆகிய ஊராட்சிகளில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக இணை இயக்குநர் திருமதி.எஸ்.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மத்திய குழுவினர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (20.10.2021) ஆய்வு மேற்கொண்டனர்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம் பட்டமங்களம், வெண்மணி ஆகிய ஊராட்சிகளில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக இணை இயக்குநர் திருமதி.எஸ்.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மத்திய குழுவினர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (20.10.2021) ஆய்வு மேற்கொண்டனர்.

நம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்ய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்தபோதிலும் மத்திய அரசு 17 சதவீதத்திற்கு மேல் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்யக்கூடாது என்ற உத்தரவிற்கு எதிராக விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு 22 சதவீதத்திற்கு மேல் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் கோரிக்கை விடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கைக்கு உடனடி தீர்வு காண வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியதால் மத்திய அரசு கோரிக்கையை ஏற்று ஹைதராபாத்தில் உள்ள இந்திய உணவு கழகத்தின் தரக்கட்டுப்பாட்டு தென் மண்டல இயக்குநர் திரு.எம்.எஸ்.கான், தலைமையில் 3 பேர் கொண்ட குழு கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பட்டமங்களம், வெண்மணி போன்ற ஊராட்சிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்த நெல்லின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்து மற்றும் நெல்லின் மாதிரிகளை எடுத்துக் கொண்டனர். இவ்வாறு எடுக்கப்படும் ஆய்வு அறிக்கையை மத்திய அரசிடம் தெரிவித்து நெல்லின் ஈரப்பதத்தை உயர்த்தி நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

இந்த ஆய்வு சென்னை நெல் தரக்கட்டுப்பாட்டு முதுநிலை மண்டல மேலாளர் திரு.எஸ்.சுப்பிரமணியன், சென்னை வணிக மேலாளர் திரு.பி.பாபு, தமிழ்நாடு நெல் கொள்முதல் முதுநிலை மண்டல மேலாளர் திரு.பொ.பாண்டியன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**